Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (20-11-65) இதழ் 281

விசுவாவசு கார்த்திகை 5 றஜபு பிறை 25 சனிக்கிழமை

## கர்ப்பிணிகளின் குறைகள் பற்றி விசாரணை

யாழ்ப்பாணம், சனி

நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள சுகாதாரசேவை உதவி டைரக்டரிடம் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் தம்மைப் பரிசோதனை செய்துகொள்ளும் கர்ப்பிணிகள் பலர் தாம் சிகிச்சை பெறுவதில் அனுபவிக்கும் கஷ்டங்கள் பற்றி எடுத்துக் கூறினர்கள்.

நேற்றுக்காலை யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்த சுகாதார சேவை உதவி டைரக்டர் பி. ஓ. டி பெரேரா ஆஸ்பத்திரியின் பல பகுதிகளையும் பார்வையிட்டார்.

கர்ப்பிணிகள் உதவி டைரக்டரிடம் தமது கஷ்டங்கள் பற்றி எடுத்துக் கூறுகையில் தாம் சிகிச்சைப் பெறுவதற்காக அதிக நேரம் காத்திருக வேண்டியிருப்பதாகவும் துண்டுகளை எடுப்பதற்காக அதிகாலையிலேயே ஆஸ்பத்திரிக்கு வர வேண்டியிருப்பதாகவும் கூறியதாகத் தெரிகிறது.

கர்ப்பிணிகள் பலர் அதிகாலையிலிருந்து கிளினிக்கில் கால் கடுக்கக் காத்துநிற்பதையும் பல தடவைகளில் கர்ப்பிணிப் பெண்கள் மூர்ச்சையடைந்த சம்பவங்களையும் அவர்கள் உதவி டைரக்டரிடம் எடுத்துக் கூறியுள்ளதாகத் தெரிகிறது. கர்ப்பிணிகள் தெரிவித்த குறைகள் பற்றி விரைவில் விசாரணை செய்ய நடவடிக்கை எடுப்பதாக உதவி டைரக்டர் தெரிவித்தார்.

சிங்கள அமுலினல் ஏற்படும் கஷ்டங்கள் பற்றி ஆராய

# சிறிமா நியமித்த கமிட்டி அறிக்கை

## இன்னும் அரசாங்கம் பரிசீலனை செய்யவில்லை

கொழும்பு, வெள்ளி

'1956-ம் வருடத்திய உத்தியோக மொழிச் சட்டம் 1958-ம் வருடத்திய தமிழ் மொழிச் சட்டம் ஆகியவைகளின் அமுலினல் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களைப் பற்றியும் நிர்வாகத்திலுள்ள சிரமங்கள் பற்றியும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா நியமித்த குழுவின் அறிக்கையை ஆராய்வதற்கு இன்றைய அரசாங்கத்துக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை' என்று பிரதமர் திரு. டட்லி சேனநாயகா இன்று காலை ஜனப்பிரதிநிதிகள் சபையில் தெரிவித்தார்.

கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்தின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு பிரதமர் கூறினர்.

அந்தக் குழுவில் ஏ. டபிள்யு. எச். அபயசுந்தரா, கியு. ஸி., பி. ஆர். தேவராஜன், எஸ். சிற்றம்பலம், எம். ஸ்ரீகாந்தா, டாக்டர் என். டி. விஜயசேகரா, டி. விபலரத்தின ஆகியோர் அங்கம் வகித்தனர் என்றும் பிரதமர் டட்லி கூறினர்.

குழுவின் அங்கத்தவர்கள் பற்றியும் அவர்கள் சமர்ப்பித்த அறிக்கையின் விபரத்தையும் தெரிவிக்குமாறு பண்டிதர் இரத்தினம் கேட்டிருந்தார்.

'இன்றைய அரசாங்கம் அந்த அறிக்கையைப் பரிசீலனைசெய்தபின் அதுபற்றி ஒரு முடிவுசெய்யும்'' என்று பிரதமர் மேலும் கூறினர்.

### உருளைக்கிழங்கு தாராளமாக கிடைக்கும்

கொழும்பு, வெள்ளி

கொழும்புக்கு வந்த சுமார் 1000 தொன் உருளைக் கிழங்கையும் உணவு இலாகா பாரமேற்றுள்ளது. இதில் 600 தொன் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் மூலம் விநியோகிக்கப்படும் மிகுதி தனியார் துறைமூலம் விநியோகிக்கப்படும்.

### 24 பேர் ஜெர்மனி செல்வர்

கொழும்பு, வெள்ளி

தொழில்முறையில்விசேஷ பயிற்சி பெறும் பொருட்டு வருகிற ஞாயிற்றுக் கிழமை 24 இலங்கையர்கள் விமான மூலம் மேற்கு ஜெர்மனிக்குப் புறப்படவிருக்கிறார்கள்.

18 முதல் 24 மாதம் அவர்கள் பயிற்சியிலீடுபட்டிருப்பார்கள்.

அரசாங்கம், அரசாங்க—தனிப்பட்ட கூட்டுத் தொழில், தனியார்தொழில் ஆகியவற்றிலிருந்து விண்ணப்பித்தவர்களிடையே இந்த 24 பேரும் பொறுக்கி எடுக்கப்பட்டார்கள். இதுவரை இந்த ரீதியில் ஜெர்மனியில் 48 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

இலங்கையில் இரண்டாவது தொழில்நுட்பப்பயிற்சி பாடசாலை ஒன்றை நிறுவ ஜெர்மனி சம்மதம் தெரிவித்திருக்கிறது.

### மாஸ்கோவுக்கு பூட்டோ

கராச்சி, நவ. 19

இந்தியாவுக்கு ஆயுத உதவியை நிறுத்தும்படி வற்புறுத்தும்பொருட்டு திரு. பூட்டோ வருகிற 23-ம் திகதி மாஸ்கோ செல்வார் என அறிவிக்கப்பட்டது.

### முன்னாள் உபஜனாதிபதி காலமானர்

வாஷிங்டன், நவ. 19

முன்னாள் அமெரிக்க உபஜனாதிபதியாக இருந்த ஹென்றி வாலஸ் தன் 77-ம் வயதில் காலமானர். 1948-ம் ஆண்டு அவர் ஜனாதிபதிபதவிக்கு போட்டியிட்டார். (பி. டி. ஸி.)

தேசிய சுவீப்

## ஜி..ஜி..ஜி... யாருக்கு?

### 01 ஜி 0256 : ரூ. 1,00,000

கேகாலை, வியா.

'ஜி' என்ற எழுத்தின்மீது நம்பிக்கை வைத்து தங்களது அதிர்ஷ்டத்தைப் பரீட்சித்தவர்களுக்கு இம்முறை தேசிய சுவீப்பில் பல பரிசுகள் கிடைத்திருக்கின்றன. முதலாவது பரிசுத்தொகையான ஒரு லட்சம் ரூபா ரொக்கப் பணத்தை மட்டுமன்றி மற்றைய இரண்டு (2ம் 3ம்) பரிசுகளையும் ஆட்கொண்டு, ஆறுதல் பரிசுகளிலும் பலருக்கு நிம்மதியளித்திருக்கிறது இந்த ஜி. சுவீப்பில் மூன்று பரிசுகளையும் அடுக்கடுக்காக ஓர் எழுத்து வெற்றிகொண்டது இதுவே முதல்தடவையென்பது குறிப்பிடத்தக்கது.

64வது தேசிய சுவீப்பின் சீட்டிழுப்பு இன்று பிற்பகல் இங்கு இழுக்கப்பட்டது. மூன்று பரிசுகளுக்குரிய டிக்கெட் இலக்கங்கள் வருமாறு:

முதலாவது பரிசு
01 G 0256 - ஒரு லட்சம் ரூபா ரொக்கப் பணம்.

இரண்டாவது பரிசு
29 G 0068 - நாற்பதாயிரம் ரூபா.

மூன்றாவது பரிசு
40 G 0976 - பத்தாயிரம் ரூபா.

ஆறுதல் பரிசு பெறும் 100 டிக்கெட்டுகளுக்கு தலா ரூபா 2,992 கிடைத்திருக்கிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

## நியமனத்தை எதிர்பார்த்து 90 மௌலவிமார் உள்ளனர்

கொழும்பு, வெள்ளி

நியமனம் கிடைக்காமல் நியமனத்தை எதிர்பார்த்து தொண்ணூறு அரபி ஆசிரியர்கள் (மௌலவி) இருக்கின்றனர் என்று பதில் கல்வி மந்திரி திரு. காமினி ஜயசூரியா, இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் மூதூர் முதலாவது எம். பி. ஜனப் எம். ஈ. எச். முகம்மதலியின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

நியமனம் வழங்குவதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்கள் நியமனத் திட்டவிதிகளின்படி முஸ்லிம் பாடசாலைகளில் நியமிக்கப்படுவார்களென்றும் பதில் கல்வி மந்திரி கூறினர்.

## இந்திய எல்லையில் 6 டிவிஷன் சீனத் துருப்புக்கள்

### சீனப்படையில் மொத்தம் 24,60 000 பேர் உள்ளனர்

லண்டன், நவ. 19

சீனவிடம் 24,60,000 நிரந்தரத் துருப்புக்கள் இருப்பதாயும், இவற்றில் 15 டிவிஷன்கள் திபேத்தில் வைக்கப் பட்டிருப்பதாயும் இங்கு வெளியான புள்ளிவிபரம் ஒன்று கூறுகிறது.

இந்தியாவின் வட எல்லையில 6 சீன டிவிஷன்கள் வைக்கப்பட்டிருக் கின்றன. இந்தியா, நேபாளம், சிக்கிம், பூட்டான் ஆகிய எல்லை நெடுகிலும் இத்துருப்புக்கள் வியாபித்திருக்கின்றன.

திபேத்தில் சீனவுக்கு 25 விமானத் தளங்கள் இருக்கின்றன. இரண்டு பெரிய ராணுவ ரஸ்தாக்களும் உள்ளன. ஒரு ரஸ்தா இமயமலையை நோக்கி வருகிறது. மற்றென்று காஷ்மீர் முதல் வடகிழக்கு எல்லைப்புற ஏஜென்ஸிவரைவருகிறது.

### அறிவித்தல்

டென்ரல் ரெக்னேலஜி பாடசாலைத் தவணை 9-1-66-ல் ஆரம்பிக்கப்படும். விண்ணப்பங்கள் முடிவு திகதி 29-12-65. பல் டாக்டர் வி. தியாகராஜ், எவ் டி. எஸ். ஸி., 81, பாங்க்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.

## இவர்களுக்கு கடன் உதவி வழங்கப்படமாட்டாது

### கைத்தொழில் பகுதி அதிகாரி அறிவிப்பு

யாழ்ப்பாணம், சனி

கிராம அபிவிருத்தி சிறு கைத்தொழில்களை அரசாங்கம் ஊக்குவிப்பதன் நோக்கத்துடன் கடந்தசில ஆண்டுகளில் சிறுகைத்தொழில்கள் பலவற்றிற்கு அரசாங்கம் கடன் உதவி கொடுத்து பொதுமக்களுக்கு உதவியளித்து வந்தது. இப்பண உதவிபெற்றவர்கள் குறிப்பிட்ட தொழில்களுக்காகக் கொடுக்கப்பட்ட பண உதவியை திருப்திகரமான முறையில் உபயோகிக்காததால் கிராம அபிவிருத்தி சிறுகைத்தொழில் அதிகாரி எவ்வித கைத்தொழில்களுக்கு வருங்காலங்களில் பண உதவி அளிக்கவேண்டுமென வரையறுத்துள்ளதாகத் தெரியவருகிறது. கீழ்க்காணும் சிறு கைத்தொழில்களுக்கு கடன் உதவி வழங்கப் படமாட்டாதென அறியப் படுகிறது.

கொப்பரா, எண்ணெய் தயாரிப்பு, பார்லிபானம் தயாரித்தல், விளக்கு, கூடுகள் தயாரித்தல், முந்திரிக் கொட்டை பாக்கட் செய்தல், வானெலிதிருத்த வேலைகள், பாண் தயாரித்தல், இனிப்புவகை செய்தல், கைத்தறி நெசவு வேலைகள், ஐஸ் கிறீம் தயாரித்தல், புத்தகம் கட்டுதல், அச்சகம் நிறுவுதல், குளிர்ந்தபானங்கள் தயாரித்தல், சட்டிவிஜாம் முதலியன செய்தல், மோட்டார் வாகனங்களுக்கு திருத்தங்கள் செய்தல், பதப் படுத்தப்பட்டபானங்கள் செய்தல், அத்தர் முதலியன தயாரித்தல், கேச நரை மாற்றும் தைலங்கள் தயாரித்தல், பிளாஸ்டிக் தயாரிப்புக்கள், எலக்ரோ பிளேட்டிங் முதலியன செய்தல், சிறுதானியங்கள் அரைத்தல், கிடுகு பின்னல் இச் சிறுகைத்தொழில்களில் ஈடுபடுபவர்களுக்கு பண உதவி வழங்கக்கூடாதென சிறு கைத்தொழில் மாவட்ட அதிகாரிகளுக்கு கிராம அபிவிருத்தி சிறுகைத்தொழில் பகுதி அதிகாரி அறிவித்துள்ளார்.

இச்சிறு கைத்தொழில்களில் ஈடுபட்டவர்கள் மக்கள் வங்கி, கூட்டுறவு கடன் கொடுக்கும் சங்கம் அல்லது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தான் தமக்குத் தேவையானநிதி உதவியைப் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### மே மாதம் கயானுவுக்குசுதந்திரம்

லண்டன், நவ. 19

பிரிட்டிஷ் கயானு அடுத்த மே மாதம் சுதந்திரம் பெறும் என இங்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### மணிவாக்கு

மண்ணிலுள்ள மனிதர்க்கே நாம் செய்யும் பணி பயன்படுகிறது. மனிதர்க்குச் செய்யும் பணி அவர் தம் உள்ளத்திலுள்ள ஆண்டவனையே சாரும்.

— திரு. வி. க.

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 38

கார்த்திகை 5 (20-11-65)

## தொழிற்சங்க விசாரணைக்குழு

தொழிற்சங்க நடவடிக்கைகள், அலுவல்கள் பற்றி ஆராய்வதற்கு ஐவர் குழுவொன்றை தொழில் அமைச்சர் நியமித்துள்ளார். விரிவான அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ள இக்குழு, இங்கு தொழிற்சங்கம் உயர்ந்த தரத்தில் வளர்ச்சி பெறக்கூடிய வகையில் சிபார்சு செய்யுமென எதிர்பார்க்கலாம்.

உதவித் தொழிற்கமிஷனர், தனியார்துறைத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இருவர், அரசாங்கத் துறைத் தொழிற்சங்கப் பிரதிநிதி ஒருவர் ஆகியோர் அங்கம் வகிக்கும் இக்குழு இப்போதுள்ள தொழிற்சங்க சட்ட விதிமுறைகள், இச்சட்டவிதிகளைத் திருத்தவேண்டிய அவசியம் பற்றியும் எவ்விதமான திருத்தங்கள் என்பது பற்றியும் ஆராய்வதுடன் தொழிற் சங்கங்களின் பதிவை வாபஸ் பெறுவது அல்லது ரத்துச் செய்வது, தொழிற்சங்க நிதியைப் பாதுகாப்பது, தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக ஊழியர் தண்டனைக்குள்ளாவது, தொழிலாளரின் தொழிற்சங்கங்களை நிர்வாகம் அங்கீகரிப்பது, தொழிலாளரல்லாதவர்கள் தொழிற்சங்க உத்தியோகஸ்தர்களாக நியமிக்கப்படுவது, ஒரு தொழிற்சங்கத்தில் அங்கத்தவர்களைக் கட்டுப்படுத்துவது, தொழிற் சங்கங்களின் அதிகரிப்பு, தொழிற் சங்கங்களின் வளர்ச்சிக்குரிய சட்ட உதவி மற்றும் உதவிகள் பற்றியும் இக்குழு ஆராயும்.

சில வருடங்களுக்கு முன்னிருந்ததைவிட இன்று இந் நாட்டில் தொழிற்சங்க இயக்கம் வெகுவாக வளர்ச்சியடைந்துள்ளதென்பது உண்மை. என்றாலும் போட்டித் தொழிற்சங்கங்கள் காரணமாகவும், தொழிற் சங்கங்கள் கட்சி அரசியலுக்குள் சம்பந்தப் படுத்தப் பட்டுள்ளதாலும் தொழிலாளர் உரிய முழுப்பயனையும் அடையவில்லை. ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்றும் தொழிலாளரே தங்கள் சங்கத்தை நிர்வகிக்கக் கூடிய நிலையும் ஏற்பட்டால் இந்நாட்டில் தொழிலாளர் அதிக பயனடைவர். தொழிலாளருக்குப் போதிய பயிற்சி இல்லாததால், சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசியல் வாதிகள் தமது நலனைப் பாதுகாக்க முயல்கின்றனர். இதனால் தொழிலாளருக் கிடையிலும் தொழிற்சங்கங்களுக்கிடையிலும் மட்டுமன்றி தொழில் துறைகளிலும் அமைதி குலைந்து விடுகிறது.

இவை தவிர தொழிற் சங்க உரிமைகளும் சில சமயங்களில் தவறாக தொழிலாளரால் பயன்படுத்தப் படுகிறது. எனவே இங்கு தொழில் அமைதி நிலவவும் தொழிலாளருக்கிடையிலும் முதலாளி — தொழிலாளிக்கிடையிலும் நல்லுறவு வளரவும், தொழிற்சங்க இயக்கம் வளர்ச்சியடையவும் தொழிற் சங்க அமைப்பு விதிமுறைகளிலும், நடவடிக்கைகளிலும் மாற்றம் செய்ய வேண்டியது அவசியம். இந்தவகையில் இக்குழு நியமிக்கப் பட்டுள்ளதை தொழிலாளரும், தொழிலாளரின் வாழ்வில் அக்கறையுடையவர்களும் வரவேற்று அதற்கு உதவியும் ஒத்துழைப்பும் அளிப்பார்களென நம்புகிறோம்.

## பிரதமரின் எச்சரிக்கை

அத்தியாவசியப் பொருள்களைப் பதுக்கி வைத்தல், கொள்ளை லாபம் அடித்தல் போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் வர்த்தகர்கள் அவர்கள் இலங்கையராயினும்சரி, இலங்கையரல்லாதவராயினும்சரி அவர்கள்மீது தயவுதாட்சண்யம் காட்டப்படமாட்டாதென்றும். அவசியமேற்பட்டால் இறக்குமதி வர்த்தகம் முழுவதையும் அரசாங்கம் தன் பொறுப்பில் எடுத்துக்கொள்ளத்தயங்கமாட்டாதென்றும் பிரதமர் தெரிவித்திருக்கிறார். யு. என். பி. பார்லிமெண்டரிக் குழுக் கூட்டத்தில் கட்சி எம். பி.க்களிடம் அவர் இதைக் கூறியுள்ளபோதிலும் சமூக விரோத நடவடிக்கைகளிலீடுபடும் வர்த்தகர்களுக்கு இது சரியான எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இதற்கு முன்னரும் பிரதமர் இதுபோன்று ஒரு எச்சரிக்கை விடுத்திருந்தார். எனினும் நிலைமை திருந்தவில்லை. எனவே இதுவும் வெறும் மிரட்டலாக இருந்து விடக் கூடாது. உறுதியுடன் நடவடிக்கை எடுத்தாலே மலைபோல் வளர்ந்துள்ள வாழ்க்கைச்செலவுயர்வுப் பிரச்னையை குறைக்கமுடியும். தனியார் துறைக்கு சலுகைகளும், வசதிகளும், உரிமைகளும் அளிக்கப்பட்டுவிட்டது. ஆனால் அவர்கள் தமது கடமையைச் சரிவரச் செய்யவில்லை. இனியும் அவர்களுக்கு அவகாசம் கொடுப்பது சுரண்டலுக்கு அவகாசம் கொடுப்பதாகும். வர்த்தகர்களில் இலங்கையரான வர்த்தகர், இலங்கையரல்லாத வர்த்தகர், பதிவுப் பிரஜையான இலங்கை வர்த்தகர் என்று பாகுபாடு காட்டுவதால் பதுக்கல், கொள்ளை லாபம் ஒழிந்து வாழ்க்கைச் செலவு உயர்வு குறைந்துவிடாது. பதுக்கல், கொள்ளைலாபம் முதலிய சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடும் வர்த்தகர்கள்மீது கடும் நடவடிக்கைஎடுக்கவேண்டும். அதிலும் பயன் கிடைக்காவிடில் அரசாங்கமே இறக்குமதி வர்த்தகத்தை காலதாமதம் செய்யாமல் ஏற்றுக் கொள்ளவேண்டும். இதற்கு முன் கூட்டுறவு மொத்தவிற்பனவுஸ்தாபனத்தையும் சீரமைத்து அங்கு ஊழல் இடம்பெறா வண்ணம் கவனிக்கவேண்டியதும் அவசியம். பதுக்கல் செய்வதும் கொள்ளை லாபம் அடிப்பதும் எந்த வர்த்தகர்கள், யார் செய்யும் சதி என்பது பற்றி பொதுமக்களுக்கு அக்கறையில்லை. அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாடில்லாமல் நியாயமான விலையில் கிடைக்க வேண்டுமென்பதுதான் அவர்கள் கவலை.

---

<u>மட்டக்களப்பில் இன்று</u>

## காப்பியச் சொற்பொழிவுகள் வெளியீட்டு விழா



மட்டக்களப்பு வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயம் தமிழ்ப் பற்றுக்கொண்டு இலக்கிய விழாக்கள் நடாத்த ஆதரவாகவும் வழிகாட்டியாகவும் அமைந்தவர் வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபர் திரு. சி. இராசதுரை.



மணிமேகலை என்னும் காப்பியத்தை ஆராய்ந்து கட்டுரை எழுதிய இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு. கே. எஸ். நடராசா.

தமிழ் இலக்கியங்களைப்பற்றித் தமிழ் மக்கள் அறியும் வகையில் சொற்பொழிவு நூல்களை வெளியிடுவது தமிழகத்தில் காணக்கூடிய தொன்றாகும். இத்துறையில் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரின் பணி சிறப்பானதாகும், குறுந்தொகைச் சொற்பொழிவுகள், புறநானூற்றுச் சொற்பொழிவுகள், பதினெண்கீழ்க் கணக்குச்சொற்பொழிவுகள் போன்ற நூல்கள் வெளிவந்துள்ளன. இத்துறையில் ஈழநாடும் தமிழ்ப் பணி ஆற்றியுள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டாக மட்டக்களப்பு வந்தாறுமூலை மத்திய மா வித்தியாலயத்தில் இன்று ''காப்பியச் சொற்பொழிவுகள்'' என்னும் நூல் வெளியிடப்படுகிறது.

சென்ற ஆண்டு இவ்வித்தியாலய உயர் வகுப்பு மாணவர் கழகம் நடாத்திய காப்பியப் பெருவிழாவின் விளைவே இந்நூலாகும். ஈழத்திலுள்ள சகல கல்லூரிகட்கும் முன்மாதிரியாக இலக்கிய உலகில் ஒரு சாதனையினை ஏற்படுத்தி இலங்கையின் நாலாபக்கமும் வாழும் நல்லறிஞரை அழைத்துச் சொற்பொழிவுகளை அமைத்துக் காப்பியப் பெருவிழாவினைக் கொண்டாடியது இக்கழகம்.

கிழக்கிலங்கை எழுத்தாளர் சங்கத்தினர் தரமான நூல்களைப் பிரசுரிக்கும் நோக்கமாக கிழக்கிலங்கைப் புத்தக சபை என்றொரு நிறுவனத்தை நிறுவியுள்ளனர். இச்சபையே தனது முதல் நூலாக அக்காப்பியச் சொற்பொழிவுகளை வெளியிட முன்வந்துள்ளது, ஈழத்து இலக்கிய நூற் பிரசுரத்தில் இஃது ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்துகிறது.

காப்பியச் சொற்பொழிவுகள் நிகழ்ந்த தமது மத்திய மா வித்தியாலய மண்டபத்திலேயே நூலினை அரங்கேற்றும் பணியில் வித்தியாலய உயர் வகுப்பு மன்றமும், கிழக்கிலங்கை எழுத்தாளர் சங்கமும் முனைந்துள்ளது. இவர் தம்முயற்சியில், தமிழ் விழாக்களை நடாத்த முன்னின்றுழைப்பவர் வித்தியாலய அதிபரான திரு. சி. இராஜதுரை ஆவர்.

இக்காப்பியச் சொற்பொழிவு நூலின் கண் இடம்பெறும் தமிழ்ப் பனுவல்களும், அவற்றின் சொற்பொழிவாளரும் பின்வருமாறு:

சிலப்பதிகாரம் வித்துவான் க. வேந்தனார்; மணிமேகலை கே.எஸ். நடராஜா; வளையாபதி, குண்டலகேசி எஸ். தனஞ்செயராஜசிங்கம்; கம்பராமாயணம் பண்டிதர் சச்சிதானந்தன்; சீவகசிந்தாமணி சு. வேலுப்பிள்ளை; பெரியபுராணம் தங்கம்மா அப்பாக்குட்டி; சீறாப்புராணம் எம். அப்துல் காதர்; தேம்பாவணி எவ். எக்ஸ். சி. நடராசா.

ஈழத்து மக்களால் எடுக்கப்படும் இவ்விழாவிற்குரிய ''காப்பியச் சொற்பொழிவுகள்'' நூலில் அமையப்பெற்ற காவியங்கள் யாவும் இந்தியத் தமிழ்ப் புலவர்களால் இயற்றப்பட்டதாகும் சைவ, வைணவ, பௌத்த, சமண, இஸ்லாமிய, கிறீஸ்தவ மதங்களின் சார்பான காப்பியங்களை அடக்கிச் சொற்பொழிவுகள் என்னும் அமைப்பில் வெளியிடப்படுவது தமிழ்இலக்கியஉலகில் மட்டுமன்றி உலக இலக்கிய வரலாற்றிலும் இதுவே முதன் முறையாகும்.

— க. நவசோதி.

## ஸ்ரீ இராமநாதன் வீதி

வெள்ளவத்தை, வெள்ளி கொழும்பு கொச்சிக்கடை வட்டாரத்தில் உள்ள ''கொட்டபொம் ஸ்றீட்'' என்னும் வீதிக்கு 'ஸ்ரீ ராமநாதன் வீதி' என்று பெயர் மாற்றம்செய்யப்படவிருக்கிறது.

காலஞ்சென்ற சேர், பொன்னம்பலம் இராமநாதனின் நினைவு நாளைக் குறித்து எதிர்வரும் 26-ந் திகதியன்று கொழும்பு நகர மேயர் திரு. வின்சென்ட் பெரேரா புதுப் பெயர் பலகையினைத் திரைநீக்கம்செய்து வைப்பார்.

மாநகரசபை அங்கத்தவர் திரு. ப. கதிரவேலு ஆச்சாரியாரே சபையில் இப்பெயர் மாற்றத்திற்காக வாதாடியவராவர். வட்டார அங்கத்தவராகிய உதவி மேயர் ஹரிஸ் விக்கிரமதுங்கவும் இதுபற்றிய தனது சம்மதத்தைத் தெரிவித்திருந்தார்.

காலஞ்சென்ற சேர். ராமநாதனால் கட்டப்பட்ட பிரசித்திபெற்ற ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வர ஆலயமும் இவ் வீதியிலேயே இருக்கின்றது. இலங்கையிலே தனிக்கருங்கற்களாலான, நுண்ணிய சிற்பவேலைப்பாடுகளைக்கொண்ட மிகப்பெரிய இந்து ஆலயம் இதுவேயாகும் என்பது குறிப்பிடத்தக்கது. தேசிய வீரர்களின் தினமும் 26-ந் திகதி கொண்டாடப்படும்.

---

## ஐயாறன் எழுதுகிறது

கொழும்பு பம்பலப்பிட்டியிலும் வெள்ளவத்தையிலும் மூன்று முக்கிய கோவில்கள் உள்ளன. சம்மாங்கோடு பிள்ளையார், புதிய கதிரேசன், பழைய கதிரேசன் இக்கோவில்கள் மூன்றும் பிரபலமானவை. இங்குதான் வருடாவருடம் ஆடிவேல் உற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது.

புறக்கோட்டையிலுள்ள சம்மாங்கோடு கதிர்வேலாயுதசுவாமி காவடியுடன் இரதத்திலே புறப்பட்டு, உபய கதிர்காமமெனப்படும் வெள்ளவத்தையிலுள்ள பிள்ளையார் கோவிலுக்கு வந்து மூன்று நாட்கள் கொலு வீற்றிருப்பார். அக்கோவிலில்தான் திருவிளங்கம் அவர்கள் கூட்டுப்பிரார்த்தனையை ஆரம்பித்து நடத்திவந்தார். மார்கழி திருவெம்பாவை உற்சவமும், அஞ்சலும் இக்கோவிலிலிருந்து நடைபெறும்.

இம் மூன்று கோவிலிலும் விசேஷம் என்னவென்றால், ஜன நெருக்கமான அப்பகுதியிலே, பல ஏக்கர் விஸ்தீரணமுள்ள தென்னந்தோப்புகள் அப்பகுதிக்கே அழகும், சுகாதாரமும் அளிப்பதாகவுள்ளன. பெரியோர்கள் மிக முன்யோசனையுடன் இக்காணிகளை வாங்கி கோவிலுடன் நன்கு பராமரித்துவந்துள்ளனர். இதில் சம்மாங்கோடு கோவில் நிர்வாகிகள் ஒரு ஏக்கர் காணியை இந்துக் கல்லூரிக்காக நீண்டகால ஒப்பந்தத்தின்மீது இலவசமாக அளித்தனர். அங்குதான் சரஸ்வதி மண்டபமும் அமைந்துள்ளது.

அப்பள்ளிக்கூடத்தில் மாணவர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் இடம் போதவில்லை. அங்கு புதிய கட்டடம் கட்டுவதாக மந்திரியும் கல்வி அதிகாரியும் வாக்களித்தும், அதை நிறைவேற்றுமல் தட்டிக் கழித்து வருவதாக ஒரு பெரிய புகார், சென்ற சனிக்கிழமையன்று நடந்த ஒரு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. முன்னைநாள் செனட்டர் நடேசன் இதுபற்றி வெளியிட்ட தகவல்கள் கவலையளித்தன.

ஃ ஃ ஃ

மற்ற இரு கோவில் காணிகளில் ஒன்றிலே விசாக வித்தியாலயமென்ற சிங்களப் பெண்கள் கல்லூரிக்காக, காணியை அரசாங்கம் நஷ்டஈடு கொடுத்து ஆர்ஜிதம் செய்வதாகத் தெரிகிறது. தமிழ்ப் பெண்களுக்காக ஒரு கல்லூரி அவசியம் தேவையென்றும் அதற்காக மற்றோர் கோவில் காணியை ஆர்ஜிதம் செய்யுமாறும், கல்வி அதிகாரிகளைக் கேட்டதற்கு, அந்தக் காணியை இலவசமாக வாங்கித் தந்தால் அங்கு ஒரு கல்லூரியைக் கட்டலாமென்று அதிகாரிகள் பதில் அளித்தனராம்.

சிங்களப் பெண்கள் கல்லூரிக்காக, நிலத்துக்குப் பணம் கொடுத்து வாங்குபவர்கள், அப்பகுதியில் வசிக்கும் தமிழ்ப் பெண்களுக்காக ஏன் அவ்விதமே நிலத்தை வாங்க மறுக்கவேண்டும்? காணியை இலவசமாகக் கொடுக்கும்படி ஏன் கேட்கவேண்டும்? ஒரு கோவில் காணிக்கு விலை கொடுத்து விட்டு, மற்றக் கோவில் காணியை இலவசமாகக் கொடுக்கும்படி கேட்

(6-ம் பக்கம் பார்க்க)

# ரொடீஷிய நகர்களில் ஆர்ப்பாட்டமும் தொழிலாளர் வேலை நிறுத்தங்களும்

## துப்பாக்கிப் பிரயோகத்தில் 4 ஆபிரிக்கர் பலி; ஏராளமானோர் காயமடைந்தனர்

### ஐ. அ. குடியரசுபோர் நிலைபிரகடனம்; கவர்ணர் கிப்ஸுக்கு மகாராணி கௌரவம்

சாலிஸ்பரி, நவ. 19

ஸ்மித்தின் அரசாங்கத்தை எதிர்த்து தலைநகரிலும், மற்றோர் நகரிலும் ஆபிரிக்கர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் நால்வர் மாண்டனர். ஏராளமானோர் காயமடைந்தனர்.

இதே காரணத்துக்காக துணி ஆலை ஒன்றில் வேலை நிறுத்தம் செய்த 350 ஆபிரிக்கர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். 2000 ஆபிரிக்க ரயில்வே சிப்பந்திகள் வேலையைவிட்டு வெளிநடப்புச் செய்ததால் பல ரயில்வே இலாகாக்களை மூட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

### நாஸர் போர் நிலை பிரகடனம்

ஸ்மித்தின் சட்டவிரோத அரசாங்கத்துக்கெதிராக ஐக்கிய அராபியக் குடியரசு போரில் ஈடுபட்டிருக்கிறது என ஜனாதிபதி நாஸர் பிரகடனப்படுத்தியிருக்கிறார். எனவே சூயஸ்கால்வாய் வழியாக வரும் ரொடீஷியாவின் எல்லாப் பொருட்களையும் கைப்பற்ற தமக்கு உரிமை உண்டென நாஸர் அறிவித்தார்.

ஐக்கிய அராபியக் குடியரசு, நைஜீரியா, கென்யா, ஸாம்பியா, தன்ஸானியா ஆகிய ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தின் ஐந்து அங்கத்தினர்கள் ரொடீஷியா பற்றி ஆலோசனை நடத்தி வருகின்றன.

ரொடீஷியப் பிரதமர் திரு. ஸ்மித் எதிர்க்கட்சி அங்கத்தினர்களையும், சுதேசித் தலைவர்களையும் ஒரு கூட்டத்திற்கு அழைத்திருக்கிறார்.

### கவர்னருக்கு மகாராணி கௌரவம்

இதற்கிடையில் ரொடீஷிய கவர்னர் திரு. ஹம்ப்ரி கிப்ஸின் தைரியத்தையும், விஸ்வாசத்தையும் மெச்சி மகாராணி எலிஸபெத் சொந்த விருது ஒன்றை அவருக்கு வழங்கியிருக்கிறார். 'நைட் கமாண்டர் ஆவ் ரோயல் விக்டோரியன் ஆடர்' என்பது அதன் பெயர். திரு. ஸ்மித்தின் சட்டவிரோத சுதந்திரப்பிரகடனத்தை தொடர்ந்து கிப்ஸ் காட்டிவரும் உறுதிக்காக இந்த கௌரவம் வழங்கப்பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் பிரதமர் வில்சன் ஸ்மித்தின்தேசத்துரோகமான நடவடிக்கைபற்றிக் குறிப்பிட்டு, மகாராணியால் மட்டுமே ரொடீஷிய கவர்னர் கிப்ஸை அகற்ற முடியுமெனக் கூறினார்.

### கட்சித் தலைவர்கள் பாராட்டு

அதேசமயம் கவர்னர் கிப்ஸுக்கு பாராட்டுத் தெரிவிக்கும் பிரேரணை ஒன்றை மூன்று அரசியல் கட்சிகளின் தலைவர்களும் பார்லிமெண்டில் சமர்ப்பித்தார்கள். பிரதமர் வில்சன், எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஹீத், லிபரல் கட்சித்தலைவர் திரு கிரிமொண்ட் ஆகியோர் இதில் கையொப்பமிட்டிருக்கிறார்கள்.

நியுயோர்க் சென்றிருந்த பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி திரு. ஸ்டுவர்ட் நேற்று லண்டன் திரும்பினார். ரொடீஷியாவின் பொறுப்பைப் பிரிட்டனிடமிருந்து ஐ. நா மேற்கொள்ள பாதுகாப்புச்சபை உதவியாக இல்லை என அவர் விடுத்த அறிக்கை ஒன்றில் கூறினார்.

## 69 பாகிஸ்தானியர் சிறைப்பட்டனர்

புதுடில்லி, நவ. 19

ராஜஸ்தானில் 2 காவல் நிலையங்களிலிருந்து பாகிஸ்தானியர் அகற்றப்பட்டிருப்பதாயும் இந்த நடவடிக்கையில் பலர் மாண்டதாயும் 69 பாகிஸ்தானியர் சிறைப்பிடிக்கப்பட்டதாயும் அறிவிக்கப்படுகிறது.

## அரசியல் கமிட்டியில் இலங்கை தீர்மானம்

நியுயோர்க், நவ. 19

இலங்கை, ஜப்பான் உள்ளிட்டு 6 நாடுகள் ஐ. நா. விசேஷ அரசியல் கமிட்டியில் தாக்கல் செய்துள்ள ஒரு தீர்மானத்தின்படி ஐ. நா. அமைதிப் பராமரிப்புக்கான 70 சதவிகிதச் செலவைப் பாதுகாப்புசபையின் 5 நிரந்தர அங்கத்தினர்கள் ஏற்க வேண்டுமென்றும், 25 சதவிகிதச் செலவை அபிவிருத்தியடைந்த நாடுகள் ஏற்க வேண்டுமென்றும் மிகுதி 5 சதவிகிதச்செலவை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் ஏற்க வேண்டும் என்றும் கோரப்பட்டிருக்கிறது.

## அதிக அமெரிக்கர் பலியாகினர்

வாஷிங்டன், நவ. 19

தென்வியட்னும் சண்டையில் ஒரே வாரத்தில் மிக அதிகமான அமெரிக்கர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என அறிவிக்கப்பட்டது. கம்போடிய எல்லைக்கருகில் வியட்காங் தாக்குதல் காரணமாக 108 அமெரிக்கர் கொல்லப்பட்டதாயும், 350க்கு மேலானோர் காயமடைந்ததாயும் கூறப்பட்டது. வியட்காங் தரப்பில் 300 பேர் மாண்டனர்.

## மகாராஜா தூதரானார்

மாட்ரிட், நவ. 19

ஸ்பெயினில் இந்தியத் தூதராக நியமிக்கப்பட்டிருக்கும் ஜயப்பூர் மகாராஜா, நேற்று தம் நியமனப் பத்திரங்களை அதிபர் பிராங்கோவிடம் சமர்ப்பித்தார்.

## சீன ஆட்சேபனை

பீகிங், நவ. 19

இந்தியத் துருப்புக்கள் சீனப் பகுதிக்குள் ஊடுருவித்தாக்கியதால், தமது வசமிருக்கும் 3 இந்தியர்களை ஒப்படைப்பது நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாய் பீகிங் தெரிவித்துள்ள ஆட்சேபக் குறிப்பு கூறுகிறது. ஆனால் சீனத் துருப்புக்கள் இந்தியப் பகுதிக்குள்புகுந்து தாக்கிவிட்டு, பழியை இந்தியாமீது போடும் தந்திரம் பழக்கப்பட்டது என டில்லியில் கூறினார்கள்.

## நிறமக்களின் அவலநிலை

லண்டன், நவ. 18

லண்டனில் நிறமக்கள் தாக்கப்படுவதையும், பொலிஸார் நிறமக்கள் விஷயத்தில் ஒழுங்கீனமாக நடந்துகொள்வதையும் ஆட்சேபித்து மேற்கிந்திய தூது கோஷ்டி ஒன்று நேற்று பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் முறையிட்டுக் கொண்ட . இதுபற்றி விசாரணை நடத்தப்படும் என அரசாங்கத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டது.

## மாணவர் ஆர்ப்பாட்டம்

காசி, நவ. 18

காசி இந்து பல்கலைக்கழக மாணவர்கள், தங்கள் பல்கலைக்கழகத்தின் பெயர் மாற்றப்பட விருப்பதை எதிர்த்து இங்கு ஆர்ப்பாட்டம் நடத்தினர்கள்

## அரசியல் நிர்ப்பந்தம் இல்லை

புதுடில்லி, நவ. 18

பாரதத்தின் மீது அரசியல் நிர்ப்பந்தம் எதையுப் அமெரிக்கா புகுத்தாது என இங்குள்ள யு. எஸ். தூதர் திரு. செஸ்டர் பவுல்ஸ் கூறினர்.

## பலகோடி கள்ளப் பணம் பறிமுதல்

கல்கத்தா, நவ. 18

கல்கத்தாவில், அதிகாரிகள் நேற்று 50 வீடுகளைச் சோதனையிட்டு கணக்கில் வராத பலகோடி ரூபாய்களைக் கைப்பற்றினர். இவர்களில்சிலர்தொழிலதிபர்கள் என்றும், வர்த்தகர்கள் என்றும் கூறப்பட்டது.

## 2000 கம்யூனிஸ்டுகள் கைது

ஜாகர்த்தா, நவ. 19

மத்திய ஜாவாவில் கடந்த வாரம் 2000 கம்யூனிஸ்டுகள் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள் என்றும், இதுவரை மொத்தம் 10000 பேர் கைதுசெய்யப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது. ராணுவத்துக்கும் கம்யூனிஸ்டுகளுக்குமிடையே இப்போது அங்கு கடும் சண்டை நடைபெற்று வருவதாய்க்கூறப்படுகிறது.

## அயூப்பற்றி ஐ நா. அறிவிப்பு

நியுயோர்க், நவ. 19

திரு. சாஸ்திரியை சந்தித்துப் பேசுவது சம்பந்தமான சோவியத் யோசனையைஜனாதிபதி அயூப் நிபந்தனையற்ற முறையில் ஏற்றுக் கொண்டது குறித்து ஐ. நா. வட்டாரங்கள் வியப்புத் தெரிவித்திருப்பதாய்க் கூறப்படுகிறது.

இந்தியா-மாஸ்கோ உறவைப் பலவீனப்படுத்தும் ஒரு தந்திரமாகவும் சிலரால் இது கருதப்படுகிறது.

## 20 வயது இளைஞன் தீக்குளித்தான்

### ஜனநாயகத்தை பாதுகாக்கவாம்

கார்ட்டூம், நவ. 19

கம்யூனிஸ்ட் கட்சியைத் தடைசெய்யும் சட்டத்தை எதிர்த்து 20 வயது மாணவன் தன் மீது எண்ணெயை ஊற்றி தீ மூட்டிக்கொண்டான்.

கிழக்கு சூடான் மெதானியிலுள்ள மார்க்கெக் பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றது.

ஆடை தீப்பற்றி எரிந்தபோது அவனைப் பாதுகாக்க வந்தவர்களிடமிருந்து தப்பி ஓடியபடியே 'ஜனநாயகத்தைப் பாதுகாக்கவே இப்படிச் செய்தேன். மஹ்கூப் நீதான் பொறுப்பாளி' என சப்தமிட்டான். பின் ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்செல்லப்பட்ட அவன் அபாயகரமான நிலையில் இருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

அரசியல் நிர்ணய சபையில் கம்யூனிஸ்ட் கட்சியைத் தடைசெய்யும் சட்டம் பிரதமர்மஹ்கூப்பினல் சமர்ப்பிக்கப்பட்டது.

எம். பிக்கள் இதற்குப் பலத்த எதிர்ப்பு காட்டிவருகின்றனர்.

கம்யூனிஸ்டாய் இருக்கும் ஒருவருக்கு இரண்டாண்டுச் சிறைத்தண்டனையும், கட்சியின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதற்கும் இச்சட்டம் வழிவகுக்கிறது.

பி. டி. ஐ.

யாழ்ப்பாணம்

## பஸ் நிலையத்தில் 'ஜேப்படி' அதிகரிப்பு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண பஸ்நிலையத்தில் இப்போது ஜேப்படித் திருட்டு அதிகரித்துக் கொண்டு வருவதாக அறியப்படுகிறது. இதற்கு பஸ் நிலையத்தில் பிரயாணிகளுக்கு இருக்கும் வசதியீனங்களும் ஒரு காரணமாகக் கருதப்படுகிறது.

சமீபத்தில் இவ்வித ஜேப்படித் திருட்டு ஒன்று நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து வயாவிளான் மூலமாக நெல்லியடிக்குச் செல்லும் பஸ் ஒன்றில் ஏற முயன்றுகொண்டிருந்த ஒரு பிரயாணி டிக்கட்டைப் பெற்றுக் கொண்டு அதற்கான கட்டணத்தைக் கொடுப்பதற்காக தமது பேர்ஸைத் தேடியபோது அப்பேர்ஸ் திருட்டுப்போய் விட்டதாக அறிந்தாராம். குறிப்பிட்ட பிரயாணி பின்னர் எவ்வளவோ சங்கடங்களுக்குள்ளாகினராம். அவரது சங்கடங்களை அவதானித்த ஒரு பெரிய மனதுள்ள ஒருசக பிரயாணி கட்டணத்துக்குரிய பணத்தைக் கொடுத்துதவியதன் பேரில் அவர் உரிய இடத்துக்குப் போய்ச் சேரக்கூடியதாக இருந்ததாகத் தெரிகிறது.

## ஜாப். உதவி மீண்டும் தொடரும்

கல்கத்தா, நவ. 19

தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த ''இந்திய உதவித்திட்டம்'' மீண்டும் ஆரம்பிக்கப்படவிருப்பதாய் டில்லியிலுள்ள ஜப்பானிய ஸ்தானிகர் இங்கு கூறினர்.

## பயிற்சிபெற்று தாயகம் திரும்பினர்

யாழ்ப்பாணம், சனி

தாய்லாந்திலுள்ள ஆசிய பொருளாதார திட்ட அபிவிருத்தி நிறுவனத்தில்திட்ட அமைப்பு சம்பந்தமாக உயர்தர பயிற்சி பெற்றுவந்த இலங்கை துறைமுக அதிகரர சபை, துறைமுக (சரக்கு) கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் புள்ளிவிபர அதிபர் திரு. இ. நடராசா அண்மையில் தாயகம் திரும்பினர்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் உபகாரச் சம்பளத் திட்டத்தின் கீழ் ஆசிய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தில் பயிற்சிபெறுவதற்காக கடந்த ஜனவரி மாதம் பாங்கொக் சென்று பயிற்சிபெற்றபின் யப்பான், சீன முதலிய நாடுகளுக்கும் இவர் சென்று துறைமுக அபிவிருத்திகள்பற்றி அறிந்தார். இதன்பின் ஆசியாவின் உயர்தர திட்ட நிபுணர்களுக்கு கிடைக்கும் உயர்தரத்திட்டப் பயிற்சி பெற்று மலாயா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சென்றிருந்தார்.

கரம்பனைச் சேர்ந்த இவர் கொழும்பு இந்துவாலிபர் சங்கத்தின் உபதலைவர்களில் ஒருவர்.

## "ஒற்றுமை வேண்டும்"

மட்டக்களப்பு, புதன்

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு'' என்று பைந்தமிழ் பாவலன் பாரதி அன்று கூறினன். பாரதியின் கூற்றுக்கு இணங்க இந்த நாட்டிலுள்ள மக்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்தால் நாம் முன்னேறுவோம் நாடு முன்னேறும்'' என்று பட்டிருப்புத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் களுவாஞ்சிக்குடி மின்சார விநியோகத்தை திறந்துவைத்துப் பேசுகையில் கூறினர்.

களுவாஞ்சிக்குடி கிராமசபை தலைவரும் முன்னாள் உதவி அமைச்சருமான திரு. எஸ். யூ. எதிர்மன்னசிங்கம் தலைமையில் நடைபெற்ற மின்சார விநியோகத் திறப்பு விழாவில் கலந்து மின்சார விநியோகத்தை திறந்து வைத்துப் மேலும் பேசுகையில் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் கூறியதாவது: மின்சாரம் ஒளி கொடுப்பதுபோல் கிராமத்துக்கும் ஒளியைக் கொடுக்க இந்தப் பட்டிருப்புத் தொகுதியில் வாழும் ஒவ்வொரு மக்களும் முன்வர வேண்டும்.

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் வள்ளுவர் கலாமன்ற பாடசாலை மண்டபத்தில் யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தாஜீ 'குறள் அறம்' எனும் பொருள் பற்றி இன்று மாலை 6-30 மணியளவில் சொற்பொழிவாற்றுவார்.

# உள்ளூராட்சிமன்ற உபதலைவர் தெரிவு

## கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் பற்றி விளக்கம்

திருக்கோணமலை, வெள்ளி உள்ளூராட்சி மன்றங்களின் உபதலைவர் தெரிவு சம்பந்தமாகக் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை விதிகளை ஞாபகமூட்டி திருக்கோணமலை மாவட்ட உள்ளூராட்சிமன்றங்களுக்கு உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. ந. சிவராசா சுற்றறிக்கையொன்றை அனுப்பியுள்ளார்.

இச்சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: 'உபதலைவர் தெரிவில் போட்டியிடுபவர்களுக்கு சமமான வாக்குகள் கிடைக்கும் பட்சத்தில் சாதாரண அங்கத்தவர்களுக்குரியது போன்று தலைவரும் தனது சாதாரண வாக்கை உபயோகிக்கலாமேயொழிய தனது மேலதிக வாக்கை உபயோகிக்க முடியாது. இக்கட்டத்தில் திருவுளச் சீட்டுமூலம் ஒருவரைத் தெரிவு செய்யவேண்டும்.

தலைவர் தெரிவு நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் அடுத்து வரும் சாதாரணக் கூட்டத்தில் அல்லது இருக்கும் உபதலைவரின் பதவிக் காலம் முடிவடைந்தபின் அடுத்துவரும் சாதாரணக் கூட்டத்தில உபதலைவர் தெரிவு நடைபெறவேண்டும். இவ்விதிகளுக்கிணங்க

பதலைவர் தெரிவை நடத்தாத உள்ளூராட்சி மன்றங்களுக்கு அந்தந்தக்காலத்திற்குரிய புதிய உபதலைவரைத் தெரிவு செய்யும் உரிமை அற்றுப் போகின்றது. பின்னர் உள்ளூராட்சி அமைச்சர் ஒரு உறுப்பினரை உபதலைவராக நியமிப்பார்.

மேற்கண் உள்ளூராட்சி மன்ற அமைப்பு விதிகளை திருமலை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்கள் அனுசரித்து நடக்காததைக்கண்டதைத் தொடர்ந்தும் உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஒருவர் தனது மேலதிக வாக்கைஉபயோகித்து உபதலைவரொருவரைத் தெரிவு செய்த விஷயமும் உதவி ஆணையாளரின்கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து இச்சுற்றறிக்கை விடப்பட்டுள்ளது.

## ரூபா 24 கோடியில் எண்ணை சுத்திஆலை

புதுடில்லி, நவ. 19

சென்னையில் ரூபா 24 கோடி செலவில் எண்ணை சுத்தி ஆலை ஒன்றை அமெரிக்கா, ஈரான் ஆகிய நாடுகளுடன் இந்தியா கூட்டாக அமைக்கும். விரைவில் அமுலாக்கப்படும் இத்திட்டத்திற்கான ஒப்பந்தத்தில் மூன்று நாட்டு பிரதிநிதிகளும் நேற்று கைச்சாத்திட்டனர்.

## நாகர்கள் திடீர் தாக்குதல்

புதுடில்லி, நவ. 19

பர்மாவுக்கும் மணிப்பூருக்குமிடையே எல்லைக் கிராமம் ஒன்றில் ஆயுதம் தரித்த நாகர்கள் இந்தியப் பாதுகாப்புப் படையுடன் திடீர் கைகலப்பில் இறங்கியதாயும், நாகர்களுக்கு இதனால் பலத்த சேதம் ஏற்பட்டதென்றும் அறிவிக்கப்படுகிறது. மெஷின் துப்பாக்கிகள், ரைபிள் ஆகியவற்றை நாகர்கள் உபயோகித்தார்கள்.

---

புதுடில்லி, நவ. 19

காந்தி நூற்றுண்டு தினத்துக்குமுன் நாட்டில் பத்துக் கோடி ஏக்கர் நிலம் சாகுபடிக்கு கொண்டுவரப்பட வேண்டும்என திட்டமிமிடப் பட்டிருக்கிறது.

## பயிர்செய்கைக் குழு

பருத்தித்துறை, வெள்ளி புலோலி தெற்கு மெதடிஸ்த பாடசாலை ஆசிரியர் சங்கம் நேற்று தலைமைஆசிரியர் திரு. த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் கூடிய போது பாடசாலைக்கான பயிர்ச்செய்கைக்குழுதெரிவு செய்யப்பட்டது,

காப்பாளர்: திரு.த.சிதம்பரப்பிள்ளை, தலைவர்: திரு. சி. கந்தையா, உறுப்பினர்கள்: திருவாளர்கள் வ. இராசையா, க. கதிர்காமர், சி. கணபதிப்பிள்ளை, மா. இராசலிங்கம், க. சுப்பிரமணியம், யோ. க. பொன்னுத்துரை.




உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொண்டீர்களா?

நத்தார் - புத்தாண்டை முன்னிட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கும் எமது

**மலிவு விற்பனை**

மூலம் பூர்த்தி செய்துகொள்ளுங்கள்!

| | | |
|---|---|---|
| கண்ணாடி அலுமாரி (ரங்கூன் தேக்கு) | 575-00 | 525-00 |
| சைனு கபினற் (தேக்கு+முதிரை) | 150-00 | 115-00 |
| டபிள் ஆம் செயர் (பிளாஸ்ரிக்) | 40-00 | 35-00 |
| ஒ" கதிரை (பிளாஸ்ரிக்) | 15-00 | 13-50 |
| 6" கதிரை (பிளாஸ்ரிக்) | 11-00 | 8-75 |

மற்றும் உங்களுக்குத் தேவையான எல்லா தளபாடங்களும் வெகுவாக விலை குறைக்கப்பட்டிருக்கிறது.

**பாஷன் பேணிஷிங் பலெஸ்**

(தளபாட மாளிகை)

5-7, ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.



**மோட்டார் உதிரிப்பாகங்களின் இறக்குமதியாளர்களே!**

ஜப்பான் ஐ. ரி. ஸி. ஓட்டோ கார்ப்பரேஷனுக்கு .

உங்களுக்கு வேண்டிய (இங்கிலிஷ், கொன்ரினென்டல், அமெரிக்கன்) முதலிய சகல மோட்டார் வாகனங்களுக்கும் இணைக்கக்கூடிய உதிரிப்பாகங்களுக்கு

ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட் மூலம் ஒழுங்கு செய்து உங்கள் லைசன்ஸ்களை விவேகமாகப் பயன்படுத்துங்கள்.

**ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்,**

விற்பனைப் பகுதி

மகாராஜா பில்டிங்,

பாங்ஷால் வீதி, கொழும்பு-11

தொலைபேசி எண்: 3603 3634






தன் குடும்பத்திற்கு சமைத்து, இடித்தல், அரைத்தல் போன்ற கடினமான வேலைகள் செய்து, ஆடைகள் துவைத்து, பிள்ளைகளையும் வளர்த்தெடுத்து, அல்லும் பகலும் உழைக்கும் அவளுக்கு குன்றாத பெலனும் சக்தியும் அவசியம். ஆகவே அவளுக்கு மாமைட் விசேஷமாகத் தேவை. B வர்க்க விட்டமின்கள் நிறைந்திருக்கும் மாமைட் அவளை அனுதினமும் சளைக்கா சக்தியுடன் சுகமாக இருக்கச் செய்கிறது.

ஆரோக்கியமாக சக்திமிகுந்து இருப்பதற்கு உங்கள் தினசரி ஆகாரத்தில் B விட்டமின்கள் அவசியம். உங்களுக்கு அனுதினமும் தேவையான B விட்டமின்கள் அனைத்தையும் அளிப்பது மட்டுமின்றி, மாமைட் ஒரு சிறந்த உணவு பொருளாகவும் இருக்கிறது. வெந்நீரிலோ அல்லது வெந்நீருடன் ஓரிரு சொட்டு எலுமிச்சம் பழச்சாறு கலந்தோ அல்லது தாளித்தோ மாமைட் அருந்தலாம். மாமைட்டை பட்டருடன் அல்லது பட்டரின்றி றொட்டி, பிஸ்கட், அப்பம் இவற்றில் இலேசாக பூசி சாப்பிடலாம். குழம்பில் அல்லது சூப்பில் மாமைட் சேர்ப்பதனால் அவற்றிற்கு மேலும் சுவையூட்டுகிறீர்கள். B வர்க்க விட்டமின்களை எளிதாக உட்கொள்வதற்கு மிக்க சுவையான முறை மாமைட்டை உங்கள் தினசரி உணவுடன் சேர்த்துக்கொள்வதே.

மாவுப் பொருள்
சர்க்கரைப் பொருள் அற்ற,
B விட்டமின் நிறைந்த,
தூய்மையான,
தாவர உணவுப்
பொருள்.




**மாமைட்**

## விளம்பரம்

அரசாங்க கேள்விப்பத்திரங்கள்
நீர்ப்பாசனப் பகுதி

என் 2117 வவுனியா உப-பிரிவிலுள்ள அன்னத்தம்பனைக் குளத்தைக் கட்டுதல் கேள்விப்பத்திரங்கள் முடிவு திகதி 14-12-65

காட்டுத் திணைக்களம்

என் 2126 யாழ்ப்பாண அரசினர் மரக் காலையில் இருக்கும் 100 கூறுகள் கொண்ட 1000 பாலை, முதிரை, யாவரணை, தேக்கு மரங்கள் (11,705.6 கன அடி) வாங்கி, வெளியேற்றுதல். கேள்விப் பத்திரங்கள் முடிவு திகதி 3-11-65.

இதன் வமுவிபரங்களுக்கும் 19-11-65ல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் 1-ம் பகுதி, II-ம் தொகுதியைப் பார்க்கவும். இதன் பிரதிகளை சகல கச்சேரிகளிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் கந்தோர்களிலும், தபாற் கந்தோர்களிலும், உப-தபாற் கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம். 641

## யாழ்ப்பாண மாநகரசபை
## கேள்வி விளம்பரம்

1966-ம் ஆண்டுக்கு மின்சாரப் பொருட்கள் விநியோகம் செய்வதற்கு கேள்வி விளம்பரங்கள் 24-12-65 நண்பகல் 12-00 மணிவரை என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும்.

17-12-1965 பி. ப. 3-00 மணிவரை ஒருசெற் விளம்பரப் பத்திரங்களுக்கு ரூ. 5/-ம், திருப்பி பெறக்கூடிய கட்டுப்பணம் ரூ. 100/-ம் செலுத்தி என்னிடமிருந்து பெறும் பத்திரங்களிலேயே கேள்வி விளம்பரங்கள் விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.

கேள்விக்குரிய நிபந்தனைகள் கேள்வி விளம்பரப் பத்திரங்களுடன் அனுப்பி வைக்கப்படும்.

ஏ. எச். ஏ. சமி,
மாநகரசபை ஆணையாளர்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
18-11-1995. 1264

## பாகிஸ்தானுக்கு இலங்கை அன்பளிப்பு

சிட்டகாங், நவ. 19

பாகிஸ்தானிலுள்ள இலங்கை ஹைகமிஷனர் மேஜர் விஜயக்கூன், சிட்டகாங்கிலுள்ள பௌத்த நிலையங்களுக்கு பௌத்த நூல்களை இலங்கையின் சார்பாக அன்பளிப்புச்செய்தார்.




## கொழும்பு
### சனி 20-11-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை

44 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர்மன்றம், 5-45 சிறுகதை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கண்டதும் கேட்டதும் — செய்திச் சுருள், 7-00 இசைவிருந்து, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 உரைச்சித்திரம் — 'மாதோட்டம்'.

### ஞாயிறு 21-11-65

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீட்டர்&61 மீட்டர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-00 குரல்வகை, 7-30 தமிழோடிசைபாடல், 8-00 தோத்திரபாடல்கள், 8-15 ஞானமிர்தம்.

344 மீட்டர்&49 மீட்டர்

8-30 முத்திநெறி, 9-00 முஸ்லிம் பாடசாலை, 9-30 கிறிஸ்தவகீதங்கள் 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர் விருப்பம், 1-00 மத்தாப்பு.

344 மீட்டர்& 61 மீட்டர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு, 5-45 சிறுகதை.

இரவு 6-15 தாளவாத்தியக்கச்சேரி, 6-45 நேயர் கடிதங்கள், 7-00 பாட்டு, 7-30 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 மனைவிளக்கு — மாதர்நிகழ்ச்சி, 9-45 மாதர்கேட்டவை, 10-15 இசையமுதம்.

## றெட்றேஞ்சர்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், சனி

மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் கிளப்புக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி மாணவர் கோஷ்டிக்குமிடையில் யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னல் மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில், மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ்கிளப் 2—0 கோல்களால் பட்டதாரி மாணவர்களைத் தோற்கடித்தது. றெட்றேஞ்சர்ஸ் முன்வணி வீரர்களில் சோதிநாதனும், பாலச்சந்திரனும் மிகவும் திறமையாக விளையாடி ஆளுக்கு ஒரு கோலைப் போட்டனர். பட்டதாரிகளின் பின்னணி வீரர்கள் திறமையாக விளையாடினுர்கள். றெட்றேஞ்சர்ஸ் கோல்காப்பு வீரர் தனபாலனின் விளையாட்டு ரசிக்கும்படியாக இருந்தது.

## நடேஸ்வரா வெற்றி

காங்கேசன்துறை, சனி

நேற்று நடேஸ்வராக் கல்லூரிக்கும் தையிட்டி ஸ்ராஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் நடேஸ்வராக் கல்லூரியினர் 3—0 கோல்களால் தையிட்டி ஸ்ராஸை தோற்கடித்தனர்.

ஆரம்பத்தில் விளையாட்டு மிகவும் ரசிக்கக்கூடியதாக இருந்தது. திரு. முருகேசு மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

## வரி விளம்பரம்

### நன்றி நவிலல்

சென்ற புதன்கிழமை (3-11-65-ல்) நடைபெற்ற எமது திருமண வைபவத்திற்கு சமுகம்தந்தவர்களுக்கும் பரிசில்கள் வழங்கியவர்களுக்கும் வாழ்த்துச்செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். க. நித்தியானந்தன்- கிரியாசக்தி, அளவெட்டிவடக்கு, அளவெட்டி 1388

### தேவை

தட்டச்சு இயந்திரங்கள் (Typewriters நல்ல நிலைமையிலுள்ள ஆங்கிலம் தமிழ் இயந்திரங்கள் தேவை யாழ். கல்லூரி, 426, ஆஸ்பத்திரி றோட், யாழ்ப்பாணம். 1390

அனுபவமுள்ள இரண்டு திறமையான சமையல்காரர்கள் உடனே தேவை. எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல.1389 'ஈழநாடு' மேற்பார்த்து யாழ்ப்பாணம். 1389

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

லொறிகளுக்குரிய 700-20, 750-20, 825-20 அளவுள்ள திறமான புதுப்பித்த டயர்கள் விற்பனைக்கு உண்டு. சிற்றி ரயர் ஸ்ரோர்ஸ், 6, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். 1383

3 ஸ்ரீ ஸ்கூட்டர் நல்ல நிலைமையில் உடனடி விற்பனைக்குண்டு. கா. முருகையா, காளிகோவிலடி, (இ. போ. ச. ஒழுங்கை), மல்லாகம். 1371

சகல நவீன வசதிகளைக் கொண்ட வீடும் காணியும் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்குண்டு. இந்த வீடு யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில் கண்டி வீதியில், சென். ஜோன்ஸ்கல்லூரிக்கு அணித்தாக உள்ளது. மூன்று பரப்புகளைக்கொண்டது கடிதம் மூலம் தொடர்பு கொள்க. குருசாமி, 108, பராக்கிரம வீதி, கொழும்பு-14. 1391

கார் E Y 3666 (203 பேஜோ) மூர்த்தி ஐயர் செம்பியன் லேன் கொக்குவில் என்னும் விலாசத்தில் பார்வையிடலாம். 1392

REGAL--JAFFNA
NOW SHOWING!
M. G. M's
36
HOURS
(Panavision)

மொரட்டுவ தளபாடங்களுக்கு பெயர்பெற்ற இடம்
அதைவிட, நியாயமான விலையில் தரம் சிறந்த தளபாடங்களை வாங்குவதற்கு
புகழ் பெற்ற இடம்
எம். எஸ். பெர்னுண்டோ அன் கோ
விருந்தை தொடக்கம் குசினி வரைக்கும் அழகு கொடுக்கும் நூற்றுக்கணக்கான மாதிரிகளில் உள்ள தனி, செட் தளபாடங்களில் உங்கள் கண்ணைக் கவரும் ஒரு செட்டைத்தான் கீழே காண்கிறீர்கள்.



நடுவிலே ஒரு மேசையுடனும், அருகில் இரு ஸ்டூல்களுடனும் உல்லாசம் தரும் ஐந்து கதிரைகளுடன் கூடிய
எந்த வீட்டுக்கும் எழில்தரும் இந்தச் செட்டின் விலை 375 ருபாவே தான்
இன்றே விஜயம் செய்யுங்கள் !
எம். எஸ் பெர்னுண்டோ அன் கோ,
இல. 32, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.
110 காலி வீதி, மொரட்டுவ, இல. 4, இன்டிபெட்டா. மொரட்டுவ.

5-வது வெற்றி வாரம்!
கிங்ஸலி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ராஜ் (நீர்கொழும்பு
தீவொளி (நுவரேலியா) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2 6, 9-30 மணிக்கு
தென்னுட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!
எம். ஜி ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னு, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த



விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை,
(ஈஸ்மென்கலர்)

மொழி இலாகா நாசவேலை:

# விசாரணை நடத்துமாறு கோரிக்கை

## "தமிழ்ப் பிரதிகளைத் தேடியுப் காணவில்லை"

— உதவி மந்திரி

## "சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்படவேண்டும்"

கொழும்பு, வியாழன்

அரசாங்கமொழி இலாகாவில் மேற்கொள்ளப்பட்ட "சதி" வேலைகள் பற்றி இன்று நடைபெற்ற பார்லிமெண்ட் கூட்டத்தில் தமிழ் எம். பி. க்கள் பிரஸ்தாபித்தனர். அரசாங்க விதிகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள் சில மொழி இலாகாவிற் காணாமற்போன குற்றச்சாட்டை உதவி நீதிமந்திரி இன்று ஏற்றுக்கொண்டார். இதுபற்றி விசாரணைகள் நடத்தி சம்பந்தப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதுடன் அவர்கள் முறையாகத் தண்டிக்கப்படவேண்டுமென்றும் எம். பி. க்கள் கோரியிருந்தனர்.

''மொழி இலாகாவில் அரசாங்க விதிகளின் தமிழ் மொழிபெயர்ப்புப் பிரதிகள் காணமற்போனதுபற்றி தேடுதல் வேலைகள் நடைபெற்றன. ஆனல் ஒரு பிரதிகூட கண்டுபிடிக்கமுடியவில்லை'' என்று உதவி நீதிமந்திரி திரு. நைனு மரிக்கார் இன்று பார்லிமெண்டில் கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

இதுபற்றி ஒரு விசாரணை நடத்தவேண்டுமென்றும், எவ்வாறு இந்தத் தமிழ் மொழிபெயர்ப்புப் பிரதிகள் காணமற்போயின என்பது பற்றியும், இச்சக்தியார் காரணகர்த்தாவாக இருந்தாரென்றும் கண்டுபிடித்து இதற்குப் பொறுப்பாயிருக்தவர்கள் தண்டிக்கப்படவேண்டுமென்றும் நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் கோரினர்.

அரசாங்க ஒழுங்கு விதிமுறை தமிழாக்கங்களும் மற்றும் பொதுசேவை கமிஷன் சட்டங்கள் நிதிமொழிபெயர்ப்புச் சட்டங்களுமே காணமற்போன சில பிரதிகளாகும்.

உதவி நீதிமந்திரி திரு. மரிக்கார் இதுகுறித்து பேசுகையில் தெரிவித்ததாவது:

மொழிபெயர்க்கப்பட்டவைகள் நகல்வரிசையிலேயிருந்தன. மொழிபெயர்ப்புக்கள் முடிவாகவோ அல்லது திருத்தியோ அமைக்கப்படவில்லை. இப்புத்தகங்களின் மொழிபெயர்ப்புக்கள் இந்தமாத முடிவிற்குள் செய்யப்படும். சிங்களத்தில் இதுவரையும் மொழிபெயர்க்கப்பட்ட சொற்தொகுதிகள், சொற்பதங்கள், தமிழிலும் மொழிபெயர்ப்பதற்குநடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன இந்தமொழிபெயர்ப்புக்களைச் செய்வதற்கு வேண்டியவர்களை இலாகாக்கள் எடுப்பதற்கு உத்தரவுகள்கொடுக்கப்பட்டுள்ளன''

### முத்திரை தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

5 சத, 3 சத, 2 சத முத்திரைகளுக்கு வடபகுதியில் இப்பொழுது பெரும் தட்டுப்பாடுஏற்பட்டுள்ளது. வடபகுதியில் உள்ள பல தபாற்கந்தோர்களில் இந்த முத்திரைகளுக்கு பெரும்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக நமது நிருபர்களின் செய்திகள் அறிவிக்கின்றன.

இதுகுறித்து யாழ்ப்பாணம் பெரிய தபாற்கந்தோரில் விசாரித்தபோது குறிப்பிட்ட முத்திரைகளின் இருப்புமுடிந்துவிட்டதாகவும் கொழும்புக்கு இதுபற்றி அறிவிக்கப்பட்டும் முத்திரைகள் இன்னும் வப்வில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. கொழும்பிலும் இம்முத்திரைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

திர்க்கட்சியினரின்

### அவநம்பிக்கைப் பிரேரணை தோல்வி

கொழும்பு, வியா.

தேசிய அரசாங்கத்தின் மீது அவநம்பிக்கை தெரிவித்து எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த முதலாவது பிரேரணை இன்று தோல்வியுற்றது.

பார்லிமெண்ட் இன்று கூடியபொழுது இந்தப் பிரேரணைமீது வாக்கெடுப்புநடைபெற்றது. பிரேரணையை ஆதரித்து 47 பேரும் எதிர்த்து 83 பேரும் வாக்களித்தனர். மதவாச்சி எம். பி. திரு. மைத்திரிபால சேனநாயக்கா இப்பிரேரணையைக் கொண்டுவந்திருந்தார். அந்நிய எண்ணெய்க் கம்பெனிகளுக்கு அரசாங்கம் நஷ்டஈடு வழங்கியது குறித்து இப்பிரேரணையில் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டிருந்தது.

**விற்பனைக்கு**

ஒரு வருடம் வரையில் ஒரு கைப்படப் பாவித்த நல்ல நிலையிலுள்ள, சுப்பர் டெக்ஸ்ரா ராக்ரர், (Fordson Super Dexta Tractor) விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு நேரில் வரவும்.

**ராஜா கோப்பறேஷன்**

ரிராக்ரர் பகுதி,

பரந்தன் 1255

### சட்டவிரோதமாகக் குடியேறினராம்

#### காரைநகரில் 8 பேர் கைது

யாழ்ப்பாணம், வெள்ளி

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு வள்ளத்தில் வந்தவாகக் கருதப்படும் 15 பேர்களில் 8 பேர்களை, நேற்று காரைநகர் மேற்கு கிராமசேவையாளர் கைதுசெய்து ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் பாரம் கொடுத்துள்ளார்.

கடற்படை, தரைப்படையின் கண்காணிப்பில் உள்ள காரைநகர் கிராமத்தில் சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் வந்து இறங்கியுள்ளார்கள்என்றுகிடைத்த தகவலைத் தொடர்ந்து கிராமசேவகர் சதாசிவம் கனகலிங்கம், உடனடியாக நடவடிக்கை எடுத்துஎட்டுப் பேர்களைக் கைது செய்தாராம்.

விசாரணையின்போது இந்தியாவிலிருந்து ஒரு வள்ளத்தில் 15 பேர் வந்ததாகவும், வள்ளம் ஓட்டிகளுக்கு தலா 200 ரூபாய் கொடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது,

மிகுதிப் பேர்களை கண்டுபிடிக்கும் நடவடிக்கையில், பொலிசாரும் கிராம சேவகர்களும் ஈடுபட்டுள்ளனர்.

### ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பது என்ன நியாயம்? தமிழ்ப் பெண்களின் கல்வி விஷயத்தில் அரசாங்கம் ஏன் இப்படி வேற்றுமையும் பாரபட்சமும் காட்டவேண்டும்?

கொழும்பிலே தமிழ் மாணவ, மாணவிகள் கல்வி கற்க தக்க பள்ளிக்கூடத்தில் சேரமுடியாதிருப்பதாயும், ராயல் கல்லூரியிலே, தமிழ் மாணவர்களுக்குப் படிப்படியாக கதவடைத்து வருவதைப்பற்றியும் பலரும் அக் கூட்டத்தில் அம்பலப்படுத்தினர்.

ஃ ஃ ஃ

கொழும்பில் மட்டுமன்றி, தீவின் மற்றப்பகுதிகளிலும் இதே மாதிரி கஷ்டங்கள் பரவியுள்ளன. தங்கள் பிள்ளைகளை ஜனவரிமாதம் எந்தப்பள்ளியில் சேர்ப்பதென்று தெரியாமல் பல பெற்றோர்களும்கவலையுடன் வேட்டையாடி வருகின்றனர். பணமில்லாத கஷ்டத்தாலேயே அரசாங்கம் உறுதிமொழிகளை நிறைவேற்ற முடியாமலும், புதிய கட்டடங்களைக் கட்டமுடியாமலும் அவதிப்படுவதாகத் தெரிகிறது. இலவசக்கல்வித் திட்டத்தால், மாணவர் தொகை அதிகம் பெருகிவிட்டது. பணமில்லாததால், அரசாங்கத்தால் சமாளிக்கமுடியவில்லை. இதனுல் பிள்ளைகள் பெரும் அவதிப்படுகிருர்கள்.

பிள்ளைகளின் மேலான நன்மையைக் கருதி, அரசாங்கம் இதுபற்றி ஆலோசனை செய்து, பொதுமக்களின் ஒத்துழைப்பையும் உதவியையும் பீண்டும் பெறுவதற்கான முறையில் கல்வித்திட்டத்தைத் திருத்தி அமைக்கவேண்டியது அவசியமாகும்,

ஃ ஃ ஃ

கொழும்பிலேயுள்ள ''அசுவவித்தியாலயத்''தைப்பற்றி ஓர் அன்பர் குறிப்பிட்டார். ''அசுவவித்தியாலய''மென்ருல் தெரியுந்தானே? கொழும்பு குதிரைப்பந்தயத்திடலில் ஆரம்பித்துள்ள சர்வகலாசாலைக்குத்தான் சிங்களத்தில் இப்படிக் கிண்டலான பெயர் வைத்துள்ளனராம். சர்வகலாசாலைக்கு சிங்களத்தில் விசுவவித்தியாலயமென்பர். குதிரைக்கு வடமொழியில் அசுவம் என்பது. ஆகவே குதிரைப்பந்தயத்திடலில் நடத்தும் சர்வகலாசாலைக்கு, ''அசுவவித்தியாலயம்'' என்று ஹாஸ்யமாகப் பெயர் வைத்துள்ளனர்!

இந்த அசுவவித்தியாலயத்தில் முதலில் இருந்த குறைகளில் பல நீக்கப்பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். ஆனல் வடமாகாணத்திலிருந்து சென்ற மாணவிகளில் சிலரைப் பெற்ரோர்கள் திருப்பி அழைத்துவந்துவிட்டதாக ஓர் அன்பர் தெரிவித்து இங்கு 'காம்பஸ்' ஆரம்பிக்காததின் பலன் இதுவென்கிருர். எப்போதுதான் இதற்கு விமோசனமோ!

ஃ ஃ ஃ

எண்ணும் எழுத்துங் குறியும் அறிபவர்தாமொழியப், பண்ணின் இசைமொழி பாடிய வானவர் தாம் பணிவார், திண்ணென் வினைகளைத் தீர்க்கும்பிரான் திருவேதிகுடி, நண்ணஅரிய அமுதினை நாமடைந்தாடுதுமே. —அப்பர்சுவாமிகள்.

### ஜீ.. ஜீ.. ஜீ... . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா ரூபா 2,992 பெறும் 100 டிக்கெட்டுகள் விபரம்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 19 | R | 0146 | 74 | J | 0170 |
| 08 | A | 0973 | 06 | X | 0898 |
| 75 | K | 0118 | 74 | O | 0353 |
| 11 | J | 0402 | 42 | X | 0068 |
| 44 | C | 0481 | 46 | L | 0972 |
| 57 | C | 0496 | 55 | V | 0061 |
| 28 | B | 0161 | 82 | L | 0403 |
| 81 | G | 0452 | 91 | M | 0406 |
| 18 | T | 0189 | 94 | O | 0451 |
| 26 | O | 0227 | 05 | J | 0364 |
| 28 | H | 0631 | 03 | X | 0244 |
| 44 | A | 0807 | 79 | T | 0783 |
| 15 | X | 0887 | 41 | A | 0505 |
| 60 | H | 0071 | 27 | F | 0284 |
| 59 | E | 0572 | 83 | F | 0773 |
| 80 | K | 0092 | 43 | M | 6336 |
| 18 | Q | 0929 | 89 | K | 0496 |
| 13 | U | 0816 | 76 | Q | 0231 |
| 77 | Y | 0555 | 75 | E | 0902 |
| 06 | S | 0426 | 84 | B | 0372 |
| 97 | H | 0468 | 17 | V | 0866 |
| 88 | E | 0732 | 93 | C | 0257 |
| 30 | M | 0116 | 28 | C | 0220 |
| 32 | E | 0556 | 49 | X | 0091 |
| 90 | C | 0834 | 10 | T | 0203 |
| 12 | O | 0027 | 82 | O | 0228 |
| 20 | Q | 0284 | 46 | Q | 0908 |
| 68 | N | 0389 | 47 | P | 0322 |
| 79 | G | 0077 | 29 | O | 0652 |
| 21 | J | 0476 | 33 | K | 0010 |
| 76 | L | 0767 | 60 | O | 0834 |
| 97 | F | 0810 | 20 | T | 0608 |
| 78 | U | 0130 | 47 | M | 0104 |
| 44 | Z | 0162 | 54 | B | 0091 |
| 14 | A | 0614 | 39 | N | 0756 |
| 78 | J | 0251 | 36 | Z | 0221 |
| 15 | L | 0520 | 90 | B | 0448 |
| 48 | W | 0785 | 60 | Y | 0646 |
| 95 | S | 0612 | 38 | N | 0787 |
| 43 | Z | 0896 | 83 | K | 0987 |
| 70 | S | 0675 | 72 | J | 0108 |
| 83 | R | 0894 | 76 | Y | 0314 |
| 30 | S | 0712 | 86 | B | 0229 |
| 51 | D | 0124 | 06 | L | 0753 |
| 10 | Y | 0885 | 24 | Q | 0073 |
| 72 | O | 0651 | 51 | Z | 0109 |
| 63 | N | 0667 | 23 | W | 0608 |
| 82 | P | 0945 | 49 | N | 0366 |
| 85 | T | 0896 | 75 | U | 0382 |
| 23 | S | 0552 | 09 | B | 0281 |

### சிதம்பரத்தில் சைவ சித்தாந்த மகாநாடு

#### மணிவிழா

சைவ சித்தாந்த சமாஜத்தின் 60-வது ஆண்டு மணிவிழா வருகிற டிசம்பர் மாதம் 30-ந் திகதி முதல் மூன்று நாட்களுக்கு சிதம்பரத்தில் நடைபெறுகிறது. திருமுருக கிருபானந்தவாரியார் சைவர் மகாநாட்டுக்குத் தலைமை தாங்குகிருர். தமிழ் நாட்டு கவர்னர் விழாவைத் துவக்கிவைப்பாரென்று தெரிகிறது.

### ஈழத்தில் சைவப்புலவர் பரீட்சை

சைவ சித்தாந்த சமாஜம் வருடந்தோறும் நடத்தும் சைவப்புலவர் பரீட்சை இம்மாதம் 20-ம், 21-ம் திகதிகளில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகியஇடங்களில் நடைபெறுகின்றது. யாழ்ப்பாணத்தில் 34பேரும் மட்டக்களப்பில் 8 பேரும் இப்பரீட்சை எழுதுவதாயும் இதில் சித்தியடைந்தவர்களுக்குத் தராதரப் பத்திரம் சிதம்பரத்தில் சைவசித்தாந்த சமாஜ மணிவிழாவில் கொடுக்கப்படுமென்றும் தெரிகிறது.

### ஜி. சி. ஈ பரீட்சை

காங்கேசன்துறை, வெள்ளி

ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சை டிசம்பர் 6ம்தேதி ஆரம்பமாகி டிசம்பர் 23ம் தேதிவரை நடைபெறும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதியிலுள்ள இலச்சத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 20திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.